**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 297/2019 P.W.5/L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. பிங்கிள் கிரேஸ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** 15.06.2026

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் A2 to A5 ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். A1 died.**

1. நான் தற்பொழுது சேனவிளை அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். 03.12.2013-ம் தேதி நான் குளச்சல் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றிய பொழுது 03.12.2013-ம் தேதி பிற்பகல் 01.45 மணியளவில் 45 வயது மதிக்கத்தக் விஜயன் என்பவரின் மனைவி செல்வி என்பவரை அவரது மருமகன் காயசிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

2. அவரை தெரிந்த 5 நபர்கள் 03.12.2013-ம் தேதியன்று காலை 08.00 மணியளவில் அவரை அவரது வீட்டில் வைத்து கைகளாலும், Rod-லு அடித்தும் கீழே தள்ளி மிதித்ததாகவும் கூறினார். அவரை நான் பரிசோதிக்கும் போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

**காயம் 1.** சிராய்ப்பு காயம் 7x7 cm அளவில் இடது முன்கையில் காணப்பட்டது.

3. அவரை நான் சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்தேன். அதன்பிறகு மாலை 06.00 மணியளவில் மேல்சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவருக்கு CT Brain Scan எடுக்கப்பட்டு அதில் Normal என Report பெறப்பட்டது. எனவே அவர் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட சிகிச்சையின் மருத்துவப் பதிவேட்டின்

அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்று சான்று கொடுத்தேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

1. பொதுவாக குற்ற சம்பவத்தின் பொழுது ஏற்பட்ட காயங்களுக்கு நபர்கள் சிகிச்சைக்கு வரும் பொழுது காவல்நிலையத்திற்கு தகவல் கொடுப்பது வழக்கம் என்றால், சரிதான். இவ்வழக்கில் 03.12.2013–ம் தேதியன்றே காவல்நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது என்றால், மருத்துவமனையிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கலாம். அது சரியாக எனக்கு ஞாபகம் இல்லை.

2. நான் கொடுக்கப்பட்ட Accident Register Copy–யில் காவல்நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டதை குறிப்பிடவில்லை என்றால், Intimation தனியாக கொடுக்கப்பட்டதால் AR Copy–யில் குறிப்பிடவில்லை. அதனை AR copy–யில் குறிப்பிட வேண்டும் என்றால், சரிதான்.

3. காயம்பட்ட நபர் சிகிச்சைக்கு வரும் பொழுது வாந்தி எடுக்கவில்லை என்றால், சரிதான். ஆனால் மாலை 06.00 மணிக்கு உள்நோயாளியாக இருக்கும் பொழுது வாந்தி எடுத்தார்.

4. காயம்பட்ட நபருக்கு கழுத்திலும், வயிற்றுப் பகுதியிலும் காயங்கள் இல்லை என்றால், சரிதான். பொதுவாக கரடுமுரடான பகுதியில் கீழே விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால், வாய்ப்பு உள்ளது மேலும் ஒரு நபர் அடிக்கும் பொழுது அதனை தடுத்தாலும் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

5. நான் காயம்பட்ட நபருக்கு முதலுதவி சிகிச்சை மட்டும் தான் அளித்தேனா என்றால், நான் சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். ஆனால் மாலை வாந்தி எடுத்த நிலையில் அவருக்கு உடம்பினுள் காயம் ஏற்பட்டிருக்கலாம் என Scan எடுக்கப்பட வேண்டும் என்பதால் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன்.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.